1991 சனவரி 23]

13-55 மணி

திரு. எஸ். ஆர், பாலசுப்பிரமணியம் : எவ்வளவோ சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. ஹவானூர் கமிஷன் ரிப்போர்ட் ஏற்றுக்கொள்ளப்பட்டு அது உடனடியாக அமல்படுத்தப்பட்டது. அது முதல்வர் அவர்களுக்கும் தெரியும், அப்போது அவர்கள் முதல்வராக இருந்த நேரத்தில். ஹவானூர் கமிஷன் ரிப்போர்ட் நம்முடைய அண்டை மாநிலத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு அது அமல்படுத்தப்பட்டது. அதேபோல கலேல்கர் கமிஷன் பற்றியும் சொல்லியிருப்பார்கள். நான் இல்லையென்று சொல்லவில்லை. எப்போதும் முழுமையாக அதற்கு எதிராக நாங்கள் இருந்ததில்லை.

காந்தியடிகளுடைய நிர்மாணத் திட்டத்திலேயே இதற்கு இடம் இருந்தது. காங்கிரசுடைய வேலைத் திட்டங்கள் அந்த அடிப்படையில்தான் அமைந்தன. இந்த அடிப்படையில் கிராமப்புற ஏழைகளைக் கை தூக்கி விடுவதை நோக்கமாகக் கொண்டு தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டங்கள், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டங்கள், ஊரக நிலமற்றோர் உறுதித் திட்டங்கள் போன்றவை காங்கிரஸ் அரசால் உருவாக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டன. அந்த அடிப்படையில்தான், பஞ்சாயத்து ராஜ் சட்டமும் அன்றைய தினம் கொண்டுவரப்பட்டது. அரசுப் பணிகள், பொது நிறுவனங்கள் ஆகியவற்றில் இட ஒதுக்கீடு செய்தால் மட்டுமே பின்தங்கிய சமூகத்தினருக்கு சமூக நீதி கிடைத்துவிட முடியாது. ஏனெனில், அரசுப் பணிகளிலும் சரி, பொதுத் துறை நிறுவனங்களிலும் சரி, நிரப்பப்படவேண்டிய காலியிடங்கள் எதுவும் இல்லை என்பதையும், புதிதாக உருவாக்கும் வாய்ப்பு இல்லை என்பதையும் 9-வது நிதிக்குழு மிகவும் தெளிவாக சொல்லிக் காட்டியிருக்கிறது என்பது கசப்பான உண்மை. நமது சட்டமன்றத்தில் 1989லே நாம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினோம். 1990லே கவர்னர் உரை யாற்றும்போது மீண்டும் அதையே சுட்டிக் காட்டியிருக்கிறீர்கள். மத்திய அரசுத் துறைகளில், கல்வி, வேலை வாய்ப்பு ஆகியவற்றில் இட ஒதுக்கீடு செய்யவேண்டுமென்று கவர்னர் உரையில் வற்புறுத்தப்பட்டது. ஆனால் கல்வியில் குறிப்பிட்ட அளவு இட ஒதுக்கீடு செய்யவில்லை. திரு. வி. பி. சிங் அரசு செய்யவில்லை. பல பதவிகளுக்குத் தேர்ச்சி பெற்றவர்கள் கிடைப்பதில்லை. அவை நிரப்பப்படாமல் காலியாக விடப்பட்டிருக்கின்றன. இந் நிலையில் பின்தங்கியவர்களுக்குக் கல்வியில் இட ஒதுக்கீடு இல்லாமல் பணிகளில் மட்டும் இட ஒதுக்கீடு செய்து என்ன பயன்? இதேபோன்று, விஞ்ஞானம், தொழில்நுட்பம், பாதுகாப்புத் துறை, ஆராய்ச்சி போன்றவற்றில் பதவி உயர்வு போன்றவற்றில் பின்தங்கியோருக்கு இட ஒதுக்கீடு இல்லை. மேலும், மாநிலங்களில் உள்ள அரசுப் பணிகளுக்கு (குறுக்கீடு). . . நமது

ஊரில் இருக்கிறது. வேறு பல இடங்களில் இல்லையென்று சொல்லிவிட்டார்கள். பொதுத் துறை நிறுவனங்களுக்கு இது பொருந்தாது என்று சொல்லி இட ஒதுக்கீடு செய்யவில்லை. தாழ்த்தப்பட்டவர்களுக்கும் பழங்குடியினருக்கும் வழங்கும் நடைமுறை பின்தங்கியவர்களுக்கு இல்லை. இட ஒதுக்கீட்டிலும் திரு. வி. பி. சிங் ஒதுக்கீடு ஒரு இடை ஒதுக்கீடாக இல்லையா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், அரசியல் சட்ட நிபுணர் டாக்டர் அம்பேத்கார் பற்றி முதலிலேயே இந்த உரையில் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அம்பேத்கார் அவர்கள் அன்றையதினம் ஜவஹர்லால் நேருவால் அடையாளம் காட்டப்பட்டு, இந்திய அரசமைப்பு சட்ட விதிகள் வரைவுக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார். அதன்மூலம் அவருடைய ஆற்றலை உலகறியச் செய்தார் பண்டித நேரு. அவருடன் அரசியல் ரீதியாக மாறுபட்டிருந்தாலும், அவருடைய அமைச்சரவையில் சட்ட அமைச்சராகப் பொறுப்பேற்கச் செய்தார். அந்த சிறப்புக்குரிய அம்பேத்காருக்கு பாராளுமன்ற வளாகத்திற்குள் சிலை வைத்து பெருமையைச் சேர்த்தது காங்கிரஸ் ஆட்சி. இதேமாதிரி மக்களவைத் துணைத் தலைவர் போன்ற பதவிகளை எதிர்க்கட்சிகளுக்கு அளிக்க வேண்டுமென்ற மரபையும் அளித்தது காங்கிரஸ் கட்சிதான். ஆனால் இங்கே சிலருடைய முகங்களைப் பார்க்கும்போது ஏன் உங்களுக்கு துணைத் தலைவர் வீற்றிருப்பது பிடிக்கவில்லையா என்று நினைப்பதுபோல் தோன்றுகிறது. நான் என்ன சொல்கிறேன் என்றால்..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : என்னை "S bj ct" -ஆக ஆக்க வேண்டாம். என்னுடைய தகுதிக்கு, வயதுக்கு இது பெரிய பதவி. (குறுக்கீடு).

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : அவர்கள் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் பிறந்தவர். அதிலும் (குறுக்கீடு) நீங்கள் அதைச் சொல்ல வேண்டாம். தீண்டாமைக் கொடுமைகளை பல நூற்றாண்டுகளாக பல தலைமுறைகளாகக் கொடுமைகளை அனுபவித்த ஒரு சமுதாயத்தைச் சேர்ந்தவர். மிகவும் நலிந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர். எனவே, வேண்டாம் என்று சொல்ல மாட்டேன். நான் முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்வது, முடிந்தால் அவரை அமைச்சராக—கேபினட் அமைச்சராக ஆக்குங்கள். (குறுக்கீடு) நீங்கள் சொல்லாதீர்கள். வேறு எதை வேண்டுமானாலும் சொல்லுங்கள், நான் உட்காருகிறேன். I am sorry.

அதுபோல ஊராட்சி ஒன்றியங்களின் நிதிநிலை குறித்து ஆராயும் நிபுணர் குழுவில், காங்கிரஸ் மற்றும் அ.இ.அ.தி.மு.க. ஆகிய பிரதான எதிர்க்கட்சிகளுக்கு இடமே கொடுக்கவில்லை. அப்படிக் கொடுக்காமல் புதிய மரபை உருவாக்கியிருக்கிறது

1991 சனவரி 23] *[திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்]*

அரசு. எனவே இந்த அரசாங்கம் சமூக நீதியைப் பற்றியும் கூசாமல் பேசுகிறது. அந்தக் குழுவில் (குறுக்கீடு).. ஏ. ஆர். தாமோதரன் குழுவில் காங்கிரசும் இல்லை, அ.இ.அ.தி.மு.க. வும் இல்லை.....

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : புரியாமல் பேசக் கூடாது. தவறாகக் கூட பேசலாம். புரியாமல் பேசக்கூடாது. திருவெறும்பூர் சேர்மன் திரு. சாமிநாதன் அவர்கள் காங்கிரஸ் காரர். அவர் அந்தக் குழுவில் இருக்கிறார்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : இருந்தால் சரி. மெத்த மகிழ்ச்சி. இல்லையென்று நினைத்தேன் (சிரிப்பு).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இதுமாதிரிதான் பொதுக் கூட்டங்களில் பேசிவிட்டு மக்களைத் திசை திருப்பு கிறீர்கள். நல்லவேளை, இங்கே பேசினீர்கள்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : துணைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக அதுபற்றி தெரியவில்லை. முதல்வர் அவர்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். தனி நபர்களைப் பற்றி பொதுக் கூட்டங்களில் நான் பேசுவதில்லை. தவறான தகவலாகிவிட்டது. என்னிடம் இருக்கிற பேப்பரில் திரு. ஏ. ஆர். தாமோதரன், திரு. பி. மாணிக்கம், திரு. என். வரதராசன், திரு. அக்கினிராஜ் போன்ற பெயர்கள் இருக்கின்றன. எப் படியோ இந்தப் பெயர் விடுபட்டிருக்கிறது. எப்படி விட்டுப் போயிற்று என்று தெரியவில்லை. அதுதான் உண்மை. நான்கு வேறு பெயர்கள் என்னிடத்தில் இருக்கின்றன. ஆனால் திரு. சாமிநாதன் பெயர் இல்லை.

14-00 மணி

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : சென்னை நகரத்தி னுடைய ஷெரீப்பாக நியமிப்பதற்கு தாழ்த்தப்பட்ட, பின் தங்கிய மக்களில் தகுதியுள்ளவராக யாரும் இந்த அரசுக்குக் கிடைக்கவில்லையா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

சட்டம் ஒழுங்கு நிலைமைகள் குறித்தும், நிர்வாகச் சீர் கேடுகள் பற்றியும் பல்வேறு குற்றச்சாட்டுகள் இந்த அரசுக்கு எதிராக எழுந்தன. அதைத் தொடர்ந்து தலைமைச் செயலாளர், காவல் துறை அதிகாரிகள் பதவிகளில் சில மாற்றங்கள் செய்யப் பட்டுள்ளன. டி.ஜி.பி. கதி என்ன என்று பத்திரிகைகளில் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். சட்டமன்றம் கூட்டப்பட்ட பிறகு, தலைமைச் செயலாளர்களுடைய கூட்டம் டெல்லியில் கூட்டப் பட்ட நேரத்தில் இந்த மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. உண்மையில் அரசினால் ஏற்பட்ட தோல்விகளுக்குப் பொறுப்பு ஏற்க வேண்டி